தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 13.02.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில்நுட்ப மையத்தில் வேளாண் தொழில்நுட்ப தொழில்முனைவோர் சந்திப்பு**

முருங்கை மரத்தின் அனைத்து பாகங்களும் பல தொழில்களில் மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளுக்கான ஒரு சக்தியாக உருவாகி வருவதால், ஒரு அற்புத மகத்துவ மரம் என்று குறிப்பிடப்படுகிறது. வைட்டமின்கள் ஏ, சி மற்றும் ஈ, புரதம் மற்றும் பல மருத்துவ குணமுள்ள பொருட்கள் நிறைந்த முருங்கை இலைகள், சந்தையின் தேவைக்கேற்ப பொடிகள், மாத்திரைகள் மற்றும் தேநீர்களாக மாற்றப்படுகின்றன, அவை ஆரோக்கிய உணவிற்கான உலகளாவிய சந்தையை பூர்த்தி செய்கின்றன. இந்த பொருட்கள் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகிறது, செரிமானத்தை மேம்படுத்துகிறது மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்த்துப் போராடுகிறது. முருங்கை விதைகளில் இருந்து பெறப்படும் எண்ணெய், அதன் ஈரப்பதம் மற்றும் எதிர்ப்பு பண்புகள் காரணமாக, தோல் பராமரிப்பு துறையில், மதிப்புமிக்க பொருளாக மாற்றப்படுகிறது. ”மோரிங்கா ப்ராமிஸ் வெல்னஸ்” என்ற பெயரில் முருங்கை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் தயாரிப்பாளரும் ஏற்றுமதியாளருமான திரு.ரஞ்சித் குமார் அவர்கள் சொற்பொழிவு ஆற்றி இளம் தொழில்முனைவோர்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்கினார்.

நபார்டின் செயல்பாடுகள், விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டை ஆதரிப்பதில் அதன் முக்கிய பங்கு பற்றிய ஆழமான நுண்ணறிவுகள் குறித்தும் விவசாயிகள், விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs) மற்றும் பழங்குடி குழுக்களுக்கான வட்டி விகிதங்களை நபார்டு எவ்வாறு குறைக்கிறது என்றும் இதனால் கடன் எளிதாகக் கிடைப்பது பற்றியும், மேலும், மாணவர்கள், தொழில்முனைவோர்கள் மற்றும் ஸ்டார்ட்-அப் நிறுவனர்கள் உள்ளிட்ட பங்கேற்பாளர்கள் நபார்டின் திட்டங்கள் மற்றும் நிதி வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்துதல், நிலையான கிராமப்புற வளர்ச்சியை வளர்ப்பதற்கு அரசு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு இடையிலான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கான கொள்கை உருவாக்கம் மற்றும் நிதி வாய்ப்புகள் குறித்தும் கோவை மற்றும் நீலகிரி மாவட்ட நபார்டு மேம்பாட்டு மேலாளர் திரு. சி. திருமலை ராவ் அவர்கள் எடுத்துரைத்தார்.

“நான் முதல்வன்” குறுகிய கால பயிற்சி திட்டம் தமிழகத்தில் உள்ள வேலையில்லா இளைஞர்கள் மற்றும் பள்ளி இடைநின்றோரின் நலனுக்காக உருவாக்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மை, வேளாண் பொறியியல், கால்நடை வளர்ப்பு, பால்வளம், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், மாற்றுத்திறனாளிகள் நலன், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி போன்ற தமிழக அரசின் பல்வேறு துறைகள் ஒன்று இணைந்து தொழில்துறையின் திறன்தேவைக்கேற்ப பயிற்சிகளை வழங்கி வருகின்றனர். மேலும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு பதிவு முகமையில் (TN Skills portal) மாணவர்கள் பதிவு செய்வதற்கான வழிமுறைகளையும் கோவை மாவட்ட திறன் மேம்பாடு மையத்தின் பயிற்சியாளர் திருமதி. லலிதா அவர்கள் மாணவர்கள் மற்றும் இளம் தொழில்முனைவோர்களுக்கு எடுத்துரைத்தார். இத்திட்டத்தின் பல்வேறு சிறப்பு அம்சங்கள் குறித்து இளம் தொழில்முனைவோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துரையாடினர்.

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் புதிய தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்கும், விவசாயம், உயிரி தொழில்நுட்பம் மற்றும் உணவுத் தொழில்நுட்பத்தை வணிக மாதிரிகளாக எடுத்துச் செல்ல இளம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் வேளாண் தொழில்நுட்ப வணிக சந்திப்பு’2025-ஐ நடத்தி வருகிறது. இந்நிகழ்வின் இறுதி நிகழ்வாக மகத்துவ முருங்கை, நான் முதல்வன் - குறுகிய கால திறன் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கான (Start-up) கொள்கை உருவாக்கம் மற்றும் நிதி வாய்ப்புகள் என்ற தலைப்பில் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையத்தில் (12.02.2025) அன்று கருத்தரங்கம் நடைபெற்றது. வேளாண் பல்கலைக்கழக தாவர மூலக்கூறு மற்றும் உயிரிதொழில்நுட்ப மையம் மற்றும் உயிரிதொழில்நுட்ப மகத்துவ மைய இயக்குனர் முனைவர். ந. செந்தில், தாவர தொழில்நுட்பவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். ஈ. கோகிலாதேவி பேராசிரியர் முனைவர்.சு.மோகன்குமார் ஆகியோர் இக்கருத்தரங்கினை தலைமை தாங்கினர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர தொழில்நுட்பவியல் துறை பேராசிரியர் முனைவர். எம். மணிகண்டபூபதி, உதவிப்பேராசிரியர் முனைவர். வி. ராஜன்பாபு மற்றும் திருமதி. தி.பிருந்தா ஆகியோர் இக்கருத்தரங்கினை ஒருங்கிணைத்தனர். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில்நுட்ப மையத்தில் நடைபெற்ற வேளாண் தொழில்நுட்ப தொழில்முனைவோர் கருத்தரங்கம் இன்றுடன் நிறைவுபெற்றது.

***மக்கள் தொடர்பு அலுவலர்***